1970 ஆகஸ்ட் 25] [திரு. மு. கருணாநிதி]

பிறகு அந்தச் சிலையை அங்கே வைப்பதற்கு முயற்சிகளை முனைந்து மேற்கொள்ளவேண்டும் என்பதை திரு. மூக்கையாத் தேவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர், முதலமைச்சர் ஆகியவர்கள் அங்கு போகிற நேரத்திலே கிளர்ச்சி நடைபெறுவது அப்படிப்பட்ட ஒரு * நடைபெறுவது நல்லதல்ல என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பேச்சிலேயே * என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நடைபெறுகின்றபொழுது இப்படிபட்ட நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்தச் சபையில் நான், தலைவர் அவர்களே, தாங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சரித்திரச் சான்றுகள் படைக்கப்படுகின்ற நேரத்திலே அந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்வார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் பயன்படுத்திய அந்த * என்ற வார்த்தையையும், நான் பயன்படுத்திய அந்த வார்த்தையையும் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டு கொள்கிறேன். தமிழ் நாட்டுச் சரித்திரம் நல்ல முறையிலே விளங்க கூடாது என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த வார்த்தைகளை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு தேவர் அவர்களும் செல்வாக்கு உள்ளவர்கள் என்ற காரணத்தினாலே கிளர்ச்சி தேவையில்லை என்ற நிலைமையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தின்படி அவையை ஒற்றி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்திலே திரு. மூக்கையா தேவர் அவர்கள் கூறிய * என்ற வார்த்தையையும் முதலமைச்சர் அவர்கள் கூறிய * என்ற வார்த்தையையும் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து நீக்கி விட ஆணையிடுகிறேன். பத்திரிக்கையாளர்களும் அதைப்போடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றுமுள்ள ஒற்றி வைப்புத் தீர்மானங்களையெல்லாம் பின்னால் எடுத்துக்கொள்ளலாம்.

3. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இப்பொழுது அவைக்கோர் அறிவிப்பு. 1970 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 24-ஆம் நாள் அன்று நடந்த அலுவல் ஆயுக் குழுவில் முடிவு செய்யப்பட்ட சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சிநிரல் பின்வருமாறு :—

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

தேதி. (1)	கிழமை. (2)	நிரல். (3)
25—8—1970 26—8—1970 27—8—1970	செவ்வாய் புதன் வியாழன்	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
28—8—1970	வெள்ளி	(அ) 1966-67-ம் ஆண்டில் கூடுதலாக ஏற்பட்ட செலவுக்கான மானியக் கோரிக்கைகளை அளித்தல். (2) 1970-71-ம் ஆண்டுக்கான முதல் துணை நிதி அறிக்கையை அளித்தல். (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
29—8—1970	சனி	தனியார் அலுவல்.
30—8—1970	ஞாயிறு	விடுமுறை.
31—8—1970	திங்கள்	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம் (கடைசி நாள்).
1—9—1970	செவ்வாய்	(அ) (1) 1966-67-ம் ஆண்டில் கூடுதலாக ஏற்பட்ட செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும். (2) 1970-71-ம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும். (ஆ) நிதி ஒதுக்க மசோதாக்களை அறிமுகப் படுத்துதல்.
2—9—1970	புதன்	(1) நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வுக் கெடுத்தலும் நிறைவேற்றலும். (2) இதர அரசினர் மசோதாக்கள்.
3—9—1970	வியாழன்	தனியார் அலுவல்.
4—9—1970	வெள்ளி	விடுமுறை (விநாயகர் சதுர்த்தி).
5—9—1970	சனி	அரசினர் மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்தல்.
6—9—1970	ஞாயிறு	விடுமுறை.
7—9—1970	திங்கள்	தேவையிருப்பின்—அரசினர் மசோதாக்களை ஆய்வுக்கெடுத்தல்.

வழக்கம்போல, பேரவை காலை 9-மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை கூடும்.